தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, ஏப்ரல் 4, திங்கட்கிழமை

பங்குனி 21, ஸ்ரீமுக - திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள."

காக்கைகள் தமது இரையை மறைத்து வைக்காமல், தம் இனத்தைக் கூவி அழைத்து, அவ்வினத்தோடு கூட சேர்ந்திருந்து அவ்வுணவை உண்ணும். அப்படிப்பட்ட இயல்புடையவர்க்கே ஆக்கம் பலவும் ஏற்படும்.

1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. ஜே. அருணாசலம் 9-3-1994 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. ஏ. ஜே. அருணாசலம் அவர்கள் 1950-ஆம் ஆண்டிலிருந்து 1952-ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1952-ஆம் ஆண்டு முதல் 1954-ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய வடாற்காடு மாவட்ட குடியாத்தம் பொது ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டப் பேரவைக்கு இருமுறை தேர்தெடுக்கப்பட்டு, பேரவையில் பணிபுரிந்த காலத்தில் செவ்வனே பணியாற்றியுள்ளார். மேலும், அவர் 1956-ஆம் ஆண்டு முதல் 1962-ஆம் ஆண்டு வரை அன்றைய சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு, இப்பேரவையின் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்]

மறைந்த அப்பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 161, திரு. சி. இராமசுவாமி; மாண்புமிகு சட்ட அமைச்சர்.

161--

விழுப்புரத்தில் குடும்ப நல நீதிமன்றம் அமைத்தல்.

24938–திரு. சி. இராமசுவாமி:

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) விழுப்புரத்தில் குடும்ப நல நீதிமன்றம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரத்தில் ஒரு குடும்ப நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இது நாள் வரை அரசின் முன் வைக்கப்படவில்லை. இத்தகைய கோரிக்கை பெறப்படின் அதன்பின் பரிசீலிக்கலாம்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் குடும்ப நல வழக்குகள்--Dowry, Maintenance, Restitution of Conjugal rights, Marriage offences like bigamy--மற்றும் இதுபோன்ற வழக்குகள் டிஸ்டிரிக்ட் கோர்ட், சப் கோர்ட் அண்டு டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டுகளில் தேங்கிக் கிடக்கின்றன. தனியாக கோர்ட் இருந்தால் அந்த வழக்குகளை